**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். சிசி. 183/2021**
**வழக்கு சாட்சி. எ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | சிதம்பரம் | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | சிவப்பிரகாசம் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | | **வயது :** | 58/2023 |

**(எதிரி ஆஜர் )**

**09.06.23**
**சாட்சி சத்தியபிரமாண வாக்குமூலம் செய்விக்கப்பட்டார்.**
**முதல் விசாரணை:-**

1) நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணையானது சாட்சியம் அளிக்க வேண்டி எனக்கு வந்தததின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கு புகார்தாரர் லதா எனக்கு மருமகள் முறை. இவ்வழக்கு எதிரி ரவிச்சந்திரன் எனக்கு 40 ஆண்டு காலம் பழக்கமானவர். எதிரிமீது நான் சமூக நீதிமன்றத்தில் சிசி.144/2013 வழக்கு தாக்கல் செய்து காசோலை தவறுகைக்காக இன்றுவரை நிலுவையில் உள்ளது. மேற்படி 2013 க்கு முன்னர் எனக்கும் எதிரிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல், இடம் விற்பனைத் தொடர்பாக பழக்க வழக்கம் இருந்தது என்றால் சரிதான். எதிரிக்குச் சொந்தமான அறந்தாங்கியில் உள்ள இடத்தினை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரையம் பெற்ற சொத்தின் அசல் பத்திரமானது ஐசிஐசிஐ வங்கியில் அடமானத்தில் இருந்து வந்தது என்றால் சரிதான். எனக்கு அறந்தாங்கி தாலுகா மாங்குடி கிராமத்தைச் சேர்ந்த கணேசக் கோனாரை தெரியுமா என்றால் தெரியும். அவரிடம் நான் எனது சொந்த குடும்பத் தேவைக்காக ரூபாய் 50,000 ம் கடன் பெற்று இருந்தேன் என்றால் 2006 ஆம் ஆண்டு அதனைப் பெற்றேன். ஐசிஐசிஐ வங்கியில் அடமானத்தில் இருந்த மூல ஆவணத்தினை எதிரி திரும்ப பெற்றுக் கொடுத்து விட்டார் என்றால் கொடுத்து விட்டார்.

2) நான் கணேசக் கோனாரிடம் கடன் பெற்ற போது நண்பர் என்ற முறையில் எதிரி அவருடைய ஐஓபி வங்கி , அறந்தாங்கி கிளை காசோலையினை எனக்காக கொடுத்தார் என்றால் ஆமாம். ஆனால் அதனை நான் கடனை அடைத்து பஞ்சாயத்தில் திரும்ப கொடுத்து விட்டேன். அன்று காசோலையினை எதிரியிடம் திரும்ப கொடுத்த போது எழுத்து மூலமாக அதனை எழுதி பெற்றேனா என்றால் பஞ்சாயத்து பேசியதால் நான் எழுதி வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் 15.10.2014 ஆம் தேதியிட்ட ஒப்பந்தப்பத்திரம் எதிரிக்கும் எனக்கும் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. 15.10.2014 ஒப்பந்தப்பத்திரத்தினைப் பொறுத்து மாங்குடி கணேசக் கோனாரினை அழைத்து சாட்சியாக விசாரணை செய்து எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஐஓபி காசோலை புத்தகத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் இல்லை. 15.10.2014 ஒப்பந்த தேதியில் தான் ஐஓபி வங்கி காசோலை புத்தகத்திலும் அதே தேதியில் கையொப்பம் இடப்பட்டதாக உள்ளது என்றால் சாட்சி மேற்படி ஆவணங்களை வாங்கி பார்த்து கையொப்பம் என்னுடையது அல்ல. தேதி ஒன்று தான் என்று கூறுகிறார்.

3) கணேசக் கோனாரிடம் கொடுத்த காசோலையை எதிரியிடம் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. 15.10.2014 ஒப்பந்த ஆவணத்தின் உள்ளதாக கூறும் எனது கையொப்பத்தினை

எனது மற்ற கையொப்பங்களுடன் கருத்துரை கேட்பதற்கு வல்லுநரிடம் அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனை இல்லை. கணேசக் கோனார் காசோலை வழங்குவதைப் பொறுத்து பஞ்சாயத்து யார் யார் முன்னிலையில் பேசப்பட்டது என்றால் அறந்தாங்கியைச் சேர்ந்த வைரவன், வழக்கறிஞர் செந்தில், கணேசக் கோனார், ஆகியோர் இருந்தனர். 11.10.2021 அன்று எதிரி எனக்கு அவரது காசோலையை வேறு ஒரு நபர் மூலமாக தாக்கல் செய்ய வேண்டாம் என கூறி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை. நான் 2011 ஆம் ஆண்டு பெரிய கடை வீதியில் மங்களம் பேன்சிஸ்ஸ்டோர் என கடை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 18.10.2011 ஆம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் என்னிடம் காட்டப்படும் வாசகங்கள் உள்ள அறிவிப்பு ஏதும் எனக்கு வரவில்லை. ஆனால் அஞ்சலக ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

4) எனக்கு வெறும் தாள் வைத்து தான் கவர் வந்தது. 18.10.2011 அன்று வெறும் தாள் வைத்து கவர் வந்தது என அவருக்கு பதில் அறிவிப்பு ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. அவருடன் அப்போது பேச்சு வார்த்தை இல்லை. கடந்த 11.02.2011 அன்று எதிரி என் மீதும் , கணேசக் கோனார் மீதும் அறந்தாங்கி காவல் நிலையத்தில் புகார் அளித்தாரா என்றால் இல்லை. அதைப்பற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் குற்ற மனு எண்.744/2011 ல் கூறப்பட்டுள்ள சிதம்பரம், கணேசக் கோனார், நான் தான் என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. புகாருக்குப் பின்னிட்டு நானும், கணேசக் கோனாரும் சேர்ந்து எதிரியினுடைய காசோலையை எங்களது வசம் வைத்து இருந்தோம் என்றால் சரியல்ல. எதிரிமீது புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்த போது தான் தெரியும். புகார்தாரரான லதாவை சந்தித்து நான் வழக்கின் விபரங்கள் என்ன வென்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு புகார்தாரர் யார் என்றே தெரியாது. எனவே நான் கேட்கவில்லை. நான் புகார்தாரரிடம் எதிரியினுடைய காசோலையை கொடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:-**

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணையானது வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.